தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 10, திருவள்ளுவர் ஆண்டு—2048

2017 மார்ச் 23, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

தன்னைத் தோண்டுபவர்களையும் கூடக் கீழே விழாமல் காப்பாற்றித் தாங்குகிற நிலத்தைப்போல தம்மை இகழ்ந்து பேசுபவரைப் பொறுத்துக்கொள்வதே மிகச் சிறந்த பண்பாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

கசிவுநீர்க் குட்டைகள்

***6389—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதியிலுள்ள காடுகளில் வன விலங்குகளுக்குக் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள், ரிஷிவந்தியம் தொகுதியிலுள்ள காடுகளில் வன விலங்குகளுக்குக் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியை முன்வைத்திருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி வனக் கோட்டப் பகுதிக்குட்பட்ட ரிஷிவந்தியம், சித்தால், அவிரியூர், கடுவனூர், காணாங்காடு, ராவத்தநல்லூர், ரங்கப்பனூர் மற்றும் பவுஞ்சிப்பட்டு ஆகிய 8 காப்புக் காடுகள் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளன. மேற்கண்ட காப்புக் காடுகளில் வாழும் புள்ளி மான், காட்டுப் பன்றி, மயில் போன்ற வன உயிரினங்கள் உணவுக்காகவும், குடிநீர்த் தேவைக்காகவும் வனப் பகுதியை விட்டு வெளியேறுவதைத் தவிர்க்க ஏதுவாகவும், இவ்வன விலங்குகளுக்குத் தொடர்ந்து அவை வாழும் பகுதிகளிலேயே குடிநீர் நிரந்தரமாகக் கிடைப்பதை உறுதி செய்யவும் ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் 7 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, சூரிய மின்சக்திமூலம் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களை (solar pumps) இயக்க உத்தேசித்து உரிய பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதியில் சுமார் 9,399 ஹெக்டேர் காப்புக் காடுகள் உள்ளன. இதில் குறிப்பாக ராவத்தநல்லூர், ரங்கப்பனூர், அவிரியூர், சித்தால், மேலப்பழங்கூர், ரிஷிவந்தியம், காணாங்காடு, பவுஞ்சிப்பட்டு போன்ற கிராமங்களைச் சுற்றி இந்தக் காப்புக் காடுகள் அமைந்துள்ளன. இந்தக் காடுகளில் மான், காட்டுப் பன்றி, காட்டு எருமை, முள்ளம்பன்றி, மயில் போன்ற பல வகை மிருகங்களும், பறவைகளும் வாழ்கின்றன. தற்போது ஏற்பட்டுள்ள இந்தக் கடுமையான வறட்சியின் காரணமாக வன விலங்குகள் தண்ணீர் அருந்துவதற்காக வனப் பகுதியைச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் மற்றும் கிராமப்புறங்களுக்குச் செல்கின்றன. இதனால் வனப் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 4,000 ஹெக்டேர் விவசாயப் பயிர்கள் காட்டு*

விலங்குகளால் பெரிதளவு பாதிக்கப்படுகின்றன. மேலும், வெளியே வருகின்ற மான், காட்டு எருமை போன்ற விலங்குகள் சாலை விபத்துகளாலும், மின் விபத்துகளாலும், கிணற்றில் விழுந்தும் இறக்க நேரிடுகிறது. கடந்த 2016–2017 ஆம் ஆண்டுகளில் இந்தப் பகுதியில் விபத்துகளால் இறந்த மான்களின் எண்ணிக்கை 46. காட்டு எருமைகளின் எண்ணிக்கை 5. முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் கடந்த 2006–2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலும், அன்பிற்கினிய தளபதி அவர்கள் துணை முதல்வராக இருந்த காலத்திலும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தப் பகுதியில் 29 குளங்கள், 32 குட்டைகள், 3 மான் குட்டைகளும், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 84 இலட்சத்து 91 ஆயிரம் கன அடி கொள்ளளவுள்ள 17 கசிவுநீர்க் குட்டைகளும், ரூபாய் 15 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டில் ரூபாய் 91,400 கன அடி அளவுள்ள தடுப்பணைகளும் அமைக்கப்பட்டு பல்வேறு வன விலங்குகளுக்குப் பயனுள்ளதாகவும், நிலத்தடி நீர் உயரவும் வழிவகை செய்யப்பட்டது. ஆனால், கடந்த 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வியை நீங்கள்தான் கேட்டிருக்கிறீர்கள். ஒரு கேள்வி கேளுங்கள். இன்னும் ஒரு கேள்வி கேட்க உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: கடந்த 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தப் பகுதியில் வன விலங்குகளின் பாதுகாப்பிற்காகவும், சுற்றியுள்ள விவசாயிகளின் பாதுகாப்பிற்காகவும் இந்த அரசு எவ்விதப் பணிகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த அரசு வன விலங்குகள் மற்றும் அருகிலுள்ள விவசாயிகளின் பயிர்ப் பாதுகாப்பிற்கு என்ன செய்யப் போகிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுகின்றபொழுது அவர்களுடைய ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளை எல்லாம் சொல்லி,

இப்பொழுது என்ன செய்யப்பட்டிருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதுபோக, இப்பொழுதுள்ள வறட்சி சூழ்நிலையில் அங்கேயிருக்கிற நிலைமைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்னும் வள்ளுவரின் வார்த்தைகளுக்குத் தொடர்ந்து வலு சேர்த்து வந்த எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வன விலங்குகளையும் காக்கும் உயர்ந்த நோக்கத்தோடு தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூ.66.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,539 கசிவுநீர்க் குட்டைகளையும், ரூ.42.86 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,062 தடுப்பணைகளையும் அமைத்து வன உயிரினங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், நடப்பாண்டில் ரூ.117.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து புலிகள் காப்பகங்கள் மற்றும் யானைகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கக் குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய ஆட்சிக்குப் பிறகு எந்தப் பணிகளும் நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் வறட்சியைப் பற்றி பேசுகின்றபோது, 140 வருடங்களில் இதுபோன்றதொரு வறட்சி ஏற்படவில்லை என்று சொல்லி, அதை எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்ட சூழ்நிலையில், இப்போது கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்காகத்தான் இந்த அரசு, இந்தச் சூழ்நிலையில், நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் 7 ஆழ்துளைக் கிணறுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ரிஷிவந்தியம் தொகுதியில் அமைக்கவுள்ளது. காப்புக் காடுகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கலாம். ஆனால், குட்டைகள் அமைத்தால் அவ்வப்போது தூர்வாரவேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆனால்,

2017 மார்ச் 23]

ஆழ்துளைக் கிணறுகளை அமைத்தால் எல்லா காலங்களிலும் தண்ணீர் கிடைக்கும் என்பதனால் அந்தப் பகுதியில் அமைக்கப்படயிருக்கிறது. ரிஷிவந்தியத்தில் இருப்பது ஒரு சிறிய காப்புக் காடுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தக் காப்புக் காடு மிகப் பெரிய அளவில் இல்லை. குறிப்பிட்ட அளவிலேயே அந்தக் காப்புக் காடு இருக்கிற காரணத்தினால், அத்தகைய ஓர் ஏற்பாடு இப்பொழுது அங்கே செய்யப்பட்டிருக்கிறது. தற்பொழுது இருக்கிற வறட்சி நிலையில், ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகக் கிடைக்கும் தண்ணீரே போதுமானது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி வனச் சரகத்திற்குட்பட்ட வெள்ளிமலை முதல் சின்னதுறை வரையுள்ள 30 கிலோ மீட்டர் சாலைப் பணிகள், கடந்த 2012 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் ரூ.40 கோடி மதிப்பீட்டிற்கு டெண்டர் விடப்பட்டு, வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெறாமல் 5 வருட காலமாக அந்தப் பணிகள் சுணக்கமாக, நடைபெறாமல் உள்ளன. அது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்.*

மேலும், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மேலப்பழங்கூர் காப்புக் காட்டில் பிரசித்திபெற்ற சிவன் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலுக்கு மாதந்தோறும் பக்தர்கள் பெருந்திரளாக வந்து செல்கின்றனர். எனவே, அந்தப் பகுதியில் செல்கின்ற சாலைக்கு வனத் துறையின்மூலம் அனுமதியளிக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 5 வருடங்களாக நடைபெறாத சாலைப் பணிகள் பற்றி சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்*

அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள். வனத் துறையின் மூலமாக அந்தப் பணிக்கு ஏதாவது இடர்பாடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணி குறித்து எங்களிடம் குறிப்புகளைக் கொடுத்தால், வனத் துறையின் மூலமாக அந்தப் பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும். வன விலங்குகளுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் பாதிப்பில்லாத வகையில், ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற இந்த அரசு, நிச்சயமாக ரிஷிவந்தியம் பகுதியையும் பாதுகாக்கும் என்கிற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதிக்கு அடுத்துள்ள திருக்கோவிலூர் தொகுதி, முகையூர் ஒன்றியத்தில் வனத்தின் வழியாகச் செல்லும் தண்டரை—அடுக்கம் சாலை பயன்படுத்த முடியாத வகையில் மண் சாலையாகவே இருக்கிறது. ஆகவே, வீரபாண்டி போன்ற பகுதிகளிலேயிருந்து கண்டாச்சிபுரம் வரவேண்டுமென்றால், வேட்டவலம் வழியாக 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. தற்போது வட்டாரத் தலைநகரமாக கண்டாச்சிபுரம் புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் வனச் சாலை அமைக்கப்பட்டால், 2 கிலோ மீட்டர் தூரம்தான் பயணம் இருக்கும். சுமார் 10 கிலோ மீட்டர் அளவிற்கு தூரம் குறையும். அந்தச் சாலையைப் பற்றி ஆணையர் மற்றும் மாவட்ட வனத் துறை அதிகாரி ஆகியோரைச் சந்தித்து நான் பேசியிருக்கிறேன். அவர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பேசி, அனுமதி வாங்கிக் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார். எனவே, நீங்கள் அந்த தண்டரை—அடுக்கம் சாலையை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன்வருவீர்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி அவர்கள், முன்னாள் அமைச்சர், சட்ட நடைமுறைகள் தெரிந்தவர். ஒரு பிரேரணை வந்தால், எப்படிச் செயல்படுத்தப்படும் என்பதையெல்லாம் அவர் ஏற்கெனவே அனுபவபூர்வமாக உணர்ந்தவர். இப்போது சொல்லப்பட்டுள்ள அந்த வனச் சாலையைப் பொறுத்தவரையில், மாவட்ட வன அலுவலர் மூலமாகப் பிரேரணைகள் எங்களுடைய அலுவலகத்திற்கு நேரடியாக வந்தால், எவ்விதத் தாமதமும் இல்லாமல் அதைச் செயல்படுத்துவதற்குரிய சூழ்நிலை, நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசிலிக்கப்படும் என்ற உறுதியை அன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பகுதிநேர நியாய விலைக் கடை

***5796—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேளூர் ஊராட்சி, அரியப்புவயல் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, தொண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் தேளூர் முழுநேர நியாய விலைக் கடை 382 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் அரியப்புவயலைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (குறுக்கீடு)